මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය :011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
General Office
ෆැක්ස්/தொலைநகல்/Fax:011-2868426
*Web: www.elections.gov.lk*

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත, රාජගිරිය(10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய(10107)
*e-mail: info@elections.gov.lk*

| | | |
|---|---|---|
| මගේ අංකය: | ඔබේ අංකය: | දිනය :. |
| எனது இல. : EC/EDR/LAE/2025/04 | உமது இல.: | திகதி : 2025.03.11 |

**சுற்றறிக்கை இல. LAE/2025/07**

அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும்
பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களக்கும்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025
மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்கள்

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் தொடர்பாக 2025.03.17 ஆந் திகதி தொடக்கம் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் ஒரு வாரம் வரையான காலப்பகுதிக்கு மாவட்டச் செயலகங்களில் ஒரு மாவட்டத்திற்கு ஒரு தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையம் என்ற வகையில் நிறுவப்படல் வேண்டும். அந்த மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்கள் தொடர்பான பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நிலையங்களுக்கு அவசியமான அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகள் வழங்குதல் போன்றவற்றிற்காக தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் ஆலோசனைக்குழுவொன்றை நியமித்தல் வேண்டும். இந்த ஆலோசனைக்குழு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர், பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் மாவட்டப் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அல்லது சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஆகியோரை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

02. மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையத்தின் பணிகளாக அமைந்துள்ள தேர்தல் தரப்பினர் தேர்தல் சட்டங்களை மீறுதல் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல் போன்றவை சம்பந்தமாகக் கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகளுக்கு உரிய நடவடிக்கையெடுத்தல் இந்நிலையங்கள் மூலமாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பாக விதிப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு உள்ள தடைகளைத் தவிர்த்துக் கொள்வதும், மேலும் அவ்வாறு நடைபெறாதிருப்பதற்கும், அத்துடன் தேர்தலை சட்டரீதியாக நடாத்துவதற்கும், முறைப்பாடுகளுக்குரிய சம்பவங்களால் சேதம் விளைவிக்கப்படுகின்ற தரப்பினருக்கு உரிய நிவாரணங்களை வழங்குவதும், போட்டியிடுகின்ற தரப்பினருக்கு சமசந்தர்ப்பம் வழங்குவதும் இந்த நிலையங்களின் முக்கிய நோக்கமாகும்.

03. கீழே காணப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரம், இந்த மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்கள் நடாத்தப்படல் வேண்டும்.

3.1. மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்கள் நிறுவுதல் மற்றும் அலுவலக வசதிகள்

3.1.1 மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் ஆகியோரின் சம்மதத்துடன் மாவட்டச் செயலக வளவினுள்ளேயே இனங்காணப்பட்ட பிறிதொரு இடத்தில் இந்த நிலையங்களை அமைத்துக் கொள்வதற்கும், அதன் அலுவலக வசதிகளைத் தற்காலிகமாக அமைத்துக் கொடுப்பதற்கும் தெரிவத்தாட்சி அலுவலர் நடவடிக்கைகளை மேற்கொள்தல் வேண்டும். இதற்கென புதிதாக அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதைத் தவிர்த்தல் வேண்டும். எவ்வாறாயினும், தவிர்க்க முடியாத காரணங்களால் மாவட்டச் செயலகத்திற்கு வெளியே அண்மித்த இடமொன்றில் இந்நிலையத்தை அமைப்பதாயின், அது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

3.1.2. இவ்வலுவலகத்திற்காக தற்காலிகத் தொலைபேசி மற்றும் தொலைநகல் வசதிகளும் வழங்கப்படல் வேண்டும். இந்தத் தொலைபேசி மற்றும் தொலைநகல் இலக்கங்களை ஊடகங்கள் மூலமாக வெளியிடுவதற்குத் தாமதமின்றி தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும். (2025.03.14 ஆம் திகதிக்கு முன்னர் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம்) அவர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.)

3.1.3 சிரேஷ்ட பதவிநிலை அலுவலராக உள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் இந்த நிலையங்கள் நடாத்தப்பட வேண்டியுள்ளதுடன், அவரது உதவிக்காக மேலுமொரு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவரை அல்லது இருவரை (இன்னமும் சேவையிலுள்ள அல்லது சேயையில் மீளச் சேர்த்துக் கொண்டுள்ள) நியமித்தல் வேண்டும். உதவிப் பொலிஸ் அதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் அடங்கிய பொலிஸ் பிரிவொன்று அமைக்கப்படல் வேண்டும். அரச முகாமைத்துவ அலுவலர் (முதலாம் தரம்) மற்றும் அதே சேவை அல்லது சமாந்தர சேவையிலுள்ள மேலுமொரு அலுவலர், அலுவலக உதவியாளர் ஒருவர் ஆகியோரும் இந்த நிலையத்திற்காக நியமிக்கப்படல் வேண்டும். இந்தப் பணிக்குழுவினரின் விபரங்கள் பற்றி EDR/24/F-1 என்னும் படிவத்தின் மூலம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும். கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை / மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்காளர் எண்ணிக்கை மற்றும் விஸ்தீரணம் / அந்தந்த உள்ளூர் அதிகாரசபைகளின் எண்ணிக்கை / போட்டியிடும் கட்சிகள் / போட்டியிடுகின்ற வேட்பாளர் எண்ணிக்கை மற்றும் மாவட்டத்தின் பரப்பளவு போன்ற விபரங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த நிலையத்திற்கு தேவையான அலுவலர்களை தீர்மானிக்க முடியும். அவ்வாறு செய்வதாயின் தேர்தல் ஆணைக்குழுவுக்கு முன்னறிவித்தல் ஒன்றை வழங்குதல் வேண்டும். பொலிஸ் அலுவலர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது உரியவாறு மாகாணத்தின் / மாவட்டத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபருடன், பிரதிப் பொலிஸ் மாஅதிபருடன், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியுடன் கலந்தாலோசித்தல் வேண்டும்.

3.1.4. இந்த நிலையங்களில் விடயங்களுக்குப் பொறுப்பான பதவிநிலை அலுவலருக்கோ அல்லது பொலிஸ் அலுவலருக்கோ கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக வெளிக்களத்திற்குச் செல்ல வேண்டியிருப்பின் அவர்களுக்கு வாகனமும், எரிபொருளும் வழங்கப்படல் வேண்டும்.

3.1.5 மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களின் நடவடிக்கைகளுக்காகத் தேவைப்படும் காகிதாதிகள் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தினால் வழங்கப்பட வேண்டும்.

3.1.6. தினந்தோறும் காலை 8.00 மணி தொடக்கம் ஆகக் குறைந்தது மாலை. 8.30 மணி வரை தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்கள் திறக்கப்பட்டிருத்தல் வேண்டியதுடன், தேர்தல் தினத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக ஆரம்பித்து தேர்தலின் பின்னர் தேர்தல் முடிவுகள் வெளியிட்டு முடிவடையும் தினம் வரை தொடர்ச்சியாக தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்கள் திறந்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறும் எண்ணிக்கையின்படியும், கிடைக்கப் பெறும் தடவைகளின் எண்ணிக்கையின்படியும் அலுவலக நேரத்தை நீடித்துக் கொள்வதற்கான பரிந்துரைகள் மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களினால் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஊடக தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

3.1.7. தேர்தல் காலப்பகுதியில் பிரதேச மட்டத்திலான தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களைத் திறந்து வைக்க வேண்டியிருப்பின், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அவ்வாறு நிறுவப்படவுள்ள நிலையங்கள் பற்றிய தகவல்களை உடனடியாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டுமெனத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறு அமைக்கப்படும் நிலையங்களுக்கான செலவினங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியுள்ளமையால், போக்குவரத்து மற்றும் தங்குமிடவசதி போன்றவற்றிற்கான செலவுகளைக் குறைக்கும் வகையில் குறித்த நிலையத்திற்கு அண்மையில் சேவையாற்றும் அலுவலர்களை ஈடுபடுத்துதல் மிகவும் உசிதமானதாகும். இவ்வாறு ஈடுபடுத்துகின்ற அலுவலர்கள் குறித்த பிரதேசம் தொடர்பாக அறிந்திருப்பவராகவும், குறித்த கடமையின் நோக்கம் மற்றும் செயற்திறன் கொண்டவராகவும், பயனுள்ள சேவையை வழங்குவதற்கு உரிய அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

## 3.2. முறைப்பாடுகளைக் கையேற்றல்

3.2.1. தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு / தெரிவத்தாட்சி அலுவலர் ஆகியோருக்கு முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கும் போது, தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களுக்கு எழுத்து மூலமாகவோ வாய்மூலமாகவோ முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கு வசதிகள் செய்யப்பட வேண்டும். முறைப்பாடுகள் சமர்ப்பிப்பதற்காக

EDR/25/F-2 என்னும் படிவத்தை அவர்களுக்கு வழங்க வேண்டும். தொலைபேசியூடாகச் செய்யும் முறைப்பாடுகளை முறைப்பாட்டாளரின் சொந்தத் தகவலுடன் (விரும்பினால் மாத்திரம்) மேற்குறித்த படிவத்தில் குறித்துக் கொள்ள வேண்டும். முறைப்பாட்டினை தொலைநகல் மூலம் சமர்ப்பிப்பதாயின், அவரது சொந்த விபரத்தையும் உட்படுத்தி அனுப்புமாறு அறிவிக்க வேண்டும். எப்பொழுதும் தொலைநகல் மூலம் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளை உடனடியாக நிழற்பிரதி எடுத்து அத்துடன் சேர்த்துக் கோவைப்படுத்துதல் வேண்டும். முறைப்பாடுகளை இனங்காண்பதற்காக இலக்கம் 01 இலிருந்து இறுதி வரை அதற்கான தொடரிலக்கத்தைக் குறித்துக் கொண்டு பேணி வருதல் வேண்டும்.

3.2.2. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏதாவதொரு மொழியைப் பயன்படுத்தி முறைப்பாட்டைச் சமர்ப்பிக்க முடியும். ஆகையால் மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களுக்கு அலுவலர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது இத்தேவைகளைப் பூர்த்தி கொள்வது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

3.2.3. ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் அனைத்து விபரங்களையும் தம்வசம் வைத்திருக்க வேண்டியதுடன், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் ஊடாக இதன் சாராம்சத்தைத் தினமும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். தினமும் நண்பகல் 12.00 மணி வரை கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளின் பிரகாரம் (EDR/25/F-3-A, EDR/25/F-3-B) என்னும் படிவத்தில் பூர்த்தி செய்து, 0705396999 என்னும் WhatsApp இலக்கத்திற்கு அல்லது தயாரித்த Excel / Word மென்பிரதியொன்றை electionedr@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு பி.ப. 3.00 மணிக்குள் 24 மணிக்குரிய அறிக்கை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். இது தொடர்பாக தயாரிக்கப்பட்ட கணினி நிகழ்ச்சித் திட்டமும் இதற்குப் பொருத்தமாகச் செயற்படவுள்ளது.

### 3.3. முறைப்பாடுகளுக்கான விசாரணைகள் மற்றும் அவை தொடர்பில் செயற்படுதல்

3.3.1. சட்டபூர்வமாக நடாத்தப்படுகின்ற கூட்டமொன்றிற்கு எவரேனுமொரு தரப்பினரால் இடையூறு செய்துள்ளதாக முறைப்பாடு கிடைத்திருப்பின், அக்கூட்டம் நடைபெறுமிடத்திற்குரிய பொலிஸ் பிரிவின் பொலிஸ் நிலைய அதிகாரி உரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன், அம்முறைப்பாடுகள் தொடர்பாக பிற்பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். அத்துடன் கூட்டங்களை நடாத்துவதற்கு விளையாட்டு மைதானம், வெளியிடங்கள், கட்டிடங்கள் அல்லது மண்டபங்கள் ஆகியவற்றை ஒதுக்கிக் கொள்வதில் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பான முறைப்பாடுகள் முன்வைக்கப்படலாமென்பதால் அச்சந்தர்ப்பங்களில் குறித்த இடத்தின் அல்லது நிறுவனத்தின் உரிமையாளர்களிடம் விசாரித்து கூட்டம் நடாத்துவதற்கு எதிர்பார்க்கின்ற தரப்பினருக்கு அநீதி இழைக்கப்படாதவாறு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்காகச் செயற்படல் வேண்டும்.

3.3.2. சட்டபூர்வமற்ற அறிவித்தல்கள் காட்சிப்படுத்துவது தொடர்பாகக் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் பற்றியும், அவற்றைக் காட்சிப்படுத்தியுள்ள பொலிஸ் பிரிவின் பொலிஸ் அலுவலர்களுக்குத் தெரிவித்து உடனடியாக அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.3.3. சட்டபூர்வமற்ற தேர்தல் பிரச்சார அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பின், அது தொடர்பாக அறிவிக்கும் நபர், தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தெரிவத்தாட்சி அலுவலருக்கும், அத்தேர்தல் பிரச்சார அலுவலகம் அமைந்துள்ள பொலிஸ் பிரிவின் பொலிஸ் நிலைய அதிகாரிக்கும் அறிவித்துள்ளாரா என்பதை அறிந்து கொள்ள வேண்டும். (அவ்வாறு அறிவித்து, அவர்களுக்கான அனுமதிப் பத்திர ஆவணத்தை குறித்த அலுவலகத்தில் காட்சிப்படுத்தியிருத்தல் வேண்டும்) அவ்வாறான அறிவித்தலின்றி சட்டபூர்வமற்ற முறையில் அந்தத் தேர்தல் பிரச்சார அலுவலகங்களை அமைத்திருப்பின், அவற்றை எமது நிலையங்கள் மற்றும் உரிய பொலிஸ் பிரிவின் பொலிஸ் அலுவலர்களைக் கொண்டு அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

3.3.4. இது தொடர்பாக மேலே கூறப்பட்டவாறு பொலிஸ் அலுவலர்களை மற்றும் மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலைய அலுவலர்களை ஈடுபடுத்துதல் வேண்டும். இந்நடவடிக்கைகளுக்காக வெளிக்களத்திற்குச் செல்வதற்கு அவசியமான விசேட காரணங்கள் இருப்பின், அது பற்றி தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் அறிவித்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். எனினும் சட்டபூர்வமற்ற அறிவித்தல்களைக் காட்சிப்படுத்துதல், அனுமதியற்ற தேர்தற் பிரச்சார அலுவலகங்கள் நடாத்துதல், அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துதல், வாகனப் பேரணி, முறையற்ற மக்கள் கூட்டம், சட்டபூர்வமற்ற செயற்பாடுகள்

என்பன இடம்பெறுகின்றனவா என ஆராய்வதற்காக நிலையத்தின் அல்லது தேர்தல் அலுவலகத்தின் அலுவலர்களை அடிக்கடி வெளிக்கள அவதானிப்புக்களில் ஈடுபடுத்துதல் வேண்டும். அத்துடன் பிரதி / உதவித் தேர்தல் ஆணையாளர்களால் பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேசச் செயலாளர்கள், ஏனைய பதவிநிலை அலுவலர்கள், கிராம அலுவலர்கள், அரசியல் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் என்போரின் ஊடாக தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் பிரதி / உதவித் தேர்தல் ஆணையாளர்களும் இயன்றவரை அனுமதியற்ற பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் சட்டமீறல்கள் தத்தமது மாவட்டங்களில் இடம்பெறுகின்றனவா என்பதை அவதானிக்க வேண்டியுள்ளது. இதன் மூலம் பிரதி / உதவித் தேர்தல் ஆணையாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் நேரடிப் பிரதிநிதிகள் என்பதும், வெளிக்கள அவதானிப்புக்களில் ஈடுபட்டவாறு சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலை நடாத்துவதற்கு உரிய சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகச் செயற்படுகின்றார்கள் என்பதும், இது விடயமாக அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதும், இதன் மூலமாக அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவும் முடியும்.

3.3.5. அரச வளங்களை கட்சி / வேட்பாரள்களின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக எவரேனும் தரப்பினர் பயன்படுத்தி உள்ளார்களென முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பின், அவற்றின் உண்மை நிலையை ஆராய்ந்து, உடனடியாக அவ்வாறான வளங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்கும் வகையில் தெரிவத்தாட்சி அலுவலரால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஏதேனும் விசேட சம்பவங்கள் பற்றி அறியக் கிடைத்தால் அது விடயமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றி தேசிய தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களுக்கு தொலைபேசி மூலம் அறிவித்தல் வேண்டும்.

3.3.6. தேர்தல் தினத்திற்கு முந்திய தினம் மற்றும் தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலைய முகவர்களுக்கும், அனுமதிக்கப்பட்ட தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் அவர்களது பணிகளுக்கும் இடையூறுகளை ஏற்படுத்தும் வகையிலான சம்பவங்கள் தொடர்பாக எழுத்து மூலமான அல்லது வாய்மூலமான முறைப்பாடுகள் சமர்ப்பித்திருப்பின், அவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் பிரதி / உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்படல் வேண்டும். வாக்களிப்பு நிலையங்களில் முகவர்களை மிரட்டுவது மற்றும் வாக்களிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றுவது போன்ற சம்பவங்கள் தேர்தல் சட்டத்தின் கீழ் தேர்தலை இரத்துச் செய்ய வழிவகுக்கும் என்பதால், இதுபோன்ற முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியம்.

3.3.7 மேற்கூறப்பட்ட சம்பவங்களில் ஏதேனும் ஒரு வாக்களிப்பு நிலையத்திலோ அல்லது அதற்கு அருகிலோ நடப்பதாகப் முறைப்பாடு கிடைக்கப்பெற்றால் அருகிலுள்ள பிராந்திய ஒருங்கிணைப்பு மையத்திற்கும், வலயத்திற்குப் பொறுப்பான தொடர்புடைய உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் உடனடியாகத் தகவல் தெரிவிக்க வேண்டும். மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலைய அலுவலர்கள் குறித்த பிரதேசத்திற்குச் சென்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிக நேரகாலம் செலவிடப்பட வேண்டியிருப்பதால் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றவுடன், தேர்தல் தினத்தில் அல்லது மறுதினம் அனைத்து பிரதேச செயலகங்களிலும் பிரதேச இணைப்பு நிலையம் ஒன்றை ஸ்தாபித்து அவற்றின் மூலம் மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது உசிதமானதாகும். பிரதேச மட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்கள் மற்றும் நடமாடும் பொலிஸ் நிலையங்கள் ஆகியவற்றிற்கும் அறிவித்து தெரிவத்தாட்சி அலுவலரின் ஆலோசனைகளின்படி செயற்படுவதுடன் தேர்தலை வழமை போல் நடாத்துவதற்கும் முடியும்.

3.3.8. உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் சம்பந்தமாகக் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போதும், விடயங்களை அறிக்கையிடும் போதும், தேர்தல் சட்டங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டுமென, தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அனைத்து பொலிஸ் அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள பொலிஸ் அலுவலர்களுக்கும் விசேடமாக அறிவிக்கப்படல் வேண்டும்.

3.3.9. உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 77 ஆம், 82 ஆம் பிரிவு ஆகியவற்றிலுள்ள விடயங்கள் தொடர்பான விளக்கங்களை அவ்வலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அத்துடன் அரசியலமைப்பு 103 மற்றும் 104 ஆம் இலக்க உறுப்புரைகள் தொடர்பாகவும் விளக்கமளித்தல் வேண்டும். அத்துடன் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்படும் வழிகாட்டல்கள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுக்கநெறி அறிவித்தல்கள் தொடர்பாகவும் அறிந்திருத்தல் வேண்டும்.

3.4. போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கும், முகவர்களுக்கும் மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களது நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை வழங்குதல் வேண்டும்.

3.4.1. மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்கள் நிறுவப்பட்ட பின்னர், மேற்படி நடவடிக்கைகளின் நோக்கங்கள் மற்றும் அந்நிலையங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக கட்சிகள் மற்றும் வேட்பாளர்களால் பெயர் குறித்தனுப்படுகின்ற முகவர்களுக்கு அறிவித்தல் வேண்டும். கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகள் மற்றும் அவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட தீர்வுகள் தொடர்பாக குறித்த முகவர்களுக்கு அறிவிப்பதற்குரிய வசதிகள் செய்யப்படல் வேண்டும்.

3.4.2. அரசியற் கட்சி மற்றும் சுயேச்சைக் குழு வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் மேற்படி நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக முன்வைக்கப்படுகின்ற யோசனைகள், முறைப்பாடுகள், விமர்சனங்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

3.4.3. பிரதேச மட்டத்திலான இந்நிலையங்கள் தொடர்பில் தேர்தல் தினத்திற்கு அண்மித்ததாக அமைக்கப்படும் பிரதேச ஒருங்கிணைப்பு நிலையங்கள் தொடர்பாகவும் அறிவித்தல் வேண்டும்.

4. ஏதேனும் பிரதேசத்தில் தேர்தலை இரத்துச் செய்யக்கூடிய வகையிலான சம்பவங்கள் இடம்பெறாதவாறு, அதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்குதல் தேர்தல்கள் ஆணைக்குழுவினதும், அரச அலுவலர்களினதும் பொறுப்பாக இருப்பதுடன், இவ்வாறான சம்பவங்களைத் தவிர்க்கும் பொருட்டு முன்னறிவித்தல்களை வழங்குதல், உபாயவழிகளை மேற்கொள்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். தேர்தல் சட்டங்களின் ஏற்பாடுகளுக்கமைவாக, தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு மேற்கூறியவாறான சம்பவங்கள் இடம்பெற்றால், உடனடியாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் பிரதி / உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு அறிவித்து, அவர்களது ஆலோசனைகளின்படி மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களின் அலுவலர்கள் செயலாற்றுதல் வேண்டும். முறைப்பாட்டில் உண்மைத்தன்மை இருப்பின் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. ஆவணங்களை நடாத்திச் செல்லல்

5.1. மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களுக்குக் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளை தொடரிலக்கங்களின் முறையில் பதிவு செய்து, அதே தொடரிலக்கங்களின் பிரகாரம் கோவைகளை நடாத்திச் செல்லல் வேண்டும்.

5.2. முறைப்பாடுகள் தொடர்பான தகவல்களை உட்சேர்க்கும் போது, கீழ்க் காணும் மாதிரியின் பிரகாரம் ஆவணமொன்றை (சீ.ஆர், புத்தகம்) நடாத்திச் செல்ல வேண்டும். கணினித் தரவுகள் தொகுதி / கணினி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைப் பயன்படுத்தி, அதன் மூலம் விபரங்களை உட்சேர்த்து தரவுகளின் அறிக்கைகளை 4 மணித்தியாலத்திற்கு ஒரு தடவை கோவைப்படுத்துதல் வேண்டுமென அலுவலர்களை அறிவுறுத்த வேண்டும்.

I. தொடரிலக்கம்
II. முறைப்பாடு கிடைக்கப் பெற்ற திகதி மற்றும் நேரம் (முறைப்பாடுகளில் திகதி முத்திரையிடப்பட வேண்டும்.)
III. முறைப்பாட்டாளரின் விபரங்கள் (பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி அல்லது குழு)
IV. முறைப்பாடுக்குரிய விடயங்கள் சுருக்கமாக.
V. முறைப்பாடு தொடர்பாக அறிவிக்கப்பட வேண்டியவர்கள் (மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் / பிரதேச பொலிஸ் நிலைய அதிகாரி / பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி / பிரதேச ஒருங்கிணைப்பு அலுவலகம்)
VI. முறைப்பாடு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெறுபேறுகள்
VII. ஏனைய விடயங்கள்
VIII. தகவல்களைக் குறித்துக் கொண்ட அலுவலரின் கையொப்பமும் பெயரும்.

5.3. தொலைபேசி, தொலைநகல் மூலம் அல்லது வாய் மூலம் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளுக்குரிய தகவல்களை அறிக்கையிடும் போது, EDR/25/F-4 என்னும் படிவத்திலும், தேர்தல் வன்முறைச் செய்திகள் தொடர்பான தகவல்களை EDR/25/F-5 என்னும் படிவத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். கிடைக்கப் பெறும் தேர்தல் வன்செயல்கள் தொடர்பாக பூர்த்தி செய்யப்படுகின்ற படிவங்களை அதே தினத்தில் 070-5396999 என்னும் WhatsApp இலக்கத்திற்கு தேசிய தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். (EDR/25/CAT) முறைப்பாடுகளின் வகைகள்)

5.4. இந்நிலையங்களில் நடாத்திச் செல்கின்ற அனைத்து ஆவணங்களையும் தேர்தல் நடவடிக்கைகள் பூர்த்தியான பின்னர் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவித்து, மாவட்டத் தேர்தல் அலுவலகங்களின் பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களிடம் முறையாகக் கையளிப்பதற்கு உரியவாறு நிலையத்தின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

**06. தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் தொடர்பான முறைப்பாடுகளை உட்சேர்க்கும் கணினி நிகழ்ச்சித் திட்டம்**

தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் செயற்பாடுகளின் போது முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்காகவும் முறைப்பாடுகள் தொடர்பாகச் செயற்படுகின்ற அலுவலர்களுக்கு முறையாகவும், செயற்றிறனுடனும் செயலாற்றக்கூடியவாறான கணினி நிகழ்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுள் ஏதாவதொன்றைப் பயன்படுத்தி கிடைக்கின்ற முறைப்பாடுகளை நிகழ்ச்சித் திட்டத்தில் உட்சேர்ப்பதற்கு இயலுமாக உள்ளதுடன், கணினியைப் பயன்படுத்துவதற்கும், தரவுகளை உட்சேர்ப்தற்கும் தகுதியுள்ள ஒரு அலுவலரால் தரவுகளை உட்சேர்த்த பின்னர், முறைப்பாடுகளின் தன்மைக்குரியவாறு வகுக்கப்பட்டுள்ள முறையில் தரவுகளை ஒவ்வொரு தொகுதிக்கும் உட்சேர்த்து உரிய அலுவலர்களுக்கு முறைப்பாடுகளின் தகவல்களை வழங்குதல் வேண்டும். இச்செயற்பாடுகளை தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களால் மேற்கொள்வதற்கு முடியுமான வகையில் இந்த கணினி நிகழ்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதுடன், முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதா என இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தினைப் பயன்படுத்துவதற்கு வசதியாக மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களின் அலுவலர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், தகவல்களை உட்சேர்க்கும் போது இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் பிரிவுகளை இனங்கண்டு கொள்வதில் சிக்கல்கள் இருப்பின், அது தொடர்பாக உங்களது மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களின் பொலிஸ் அலுவலர்களது ஒத்துழைப்பைப் பெறுமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவ நிலையத்தில் முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கான மொபைல் செயலி (mobile App) இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட உள்ளதால், அந்த மொபைல் (mobile App) செயலியின் அடிப்படையில் முறைப்பாடுகளைப் பெற்று பொலிஸ் பிரிவுகளுக்கு அனுப்புவதற்கும் அந்த முறைப்பாடுகள் எவ்வாறு கையாளப்பட்டன என்பதை விசாரிக்கவும் மாவட்டங்களில் பயிற்சி பெற்ற அதிகாரிகளுக்குத் தேவையான உபகரணங்களை நீங்கள் வழங்குதல் வேண்டும்.

**07. ஏனைய விடயங்கள்**

7.1. மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும், பிரதேச மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை மேலும் சிறப்பானதாக மேற்கொள்வதற்கும் தேர்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கும் உரியவாறு செயற்படுமாறு தெரிவித்துக் கொள்கின்றேன். அரச சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்துகின்றமை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இது தொடர்பாக உரிய அலுவலர்களுக்கு அறிவிக்கவும். மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களுக்குக் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளை

மாவட்டத்தினுள்ளேயே தீர்த்து வைப்பதற்கு முடியாமற் போகும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் ஆணைக்குழுவின் தேசிய தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையத்திற்குச் சமர்ப்பித்தல் பொருத்தமானதாகும். அத்துடன் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணையின் போது, சட்டவிரோதமான காட்சிப்படுத்தல்கள் மற்றும் பிரச்சார அலுவலகங்களை அகற்றுதல் போன்ற சந்தர்ப்பங்களில், ஒருபோதும் துவேஷமாகவோ, முன்னேற்பாடுகள் இன்றியோ செயற்படுவதைத் தவிர்த்துக் கொள்வதுடன், நல்லொழுக்கம் மிக்கதாகவும், சட்டபூர்வமாகவும் செயற்பட வேண்டியுள்ளது. குறித்த தரப்பினரின் சுயகௌரவத்திற்கு பாதிப்பு ஏற்படாதவாறு செயற்படுதலும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும். இவற்றை உரிய அலுவலர்களக்கு அறிவித்தல் வேண்டும்.

7.2. அத்துடன் உங்களது மாவட்டத்தில் அல்லது அந்தந்த உள்ளூரதிகார சபைப் பிரதேசங்களில் இடம்பெறும் விசேடமான விடயங்கள் தொடர்பான தகவல்களை மாத்திரம் தலைமையலுவலகத்தின் மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம்) அவர்களை அணுக வேண்டும்.

தேசிய தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் ஒருங்கிணைப்பு நிலையத்தின் தகவல்கள் கீழ்க்கண்டாவாறாகும்.

| | |
|---|---|
| தொலைபேசி இலக்கம் | - 011-2868471<br>- 011-2868153 |
| தொலைநகல் இலக்கம் | - 011-2868153<br>- 011-2868153 |
| Viber / Whatsapp | - 070-5396999 |
| E-Mail | - electionedr@gmail.com |

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

பிரதிகள் :-

1. பொலிஸ்மா அதிபர் (ப.க) } தெரிந்து கொள்வதற்கும், 3.1.3. ஆம் பந்தியின் பிரகாரம் தேர்தல் முறைப்பாட்டு பிணக்குகள் தீர்த்தல் நிலையத்திற்கு பொலிஸ் அலுவலர்களை நியமிப்பதற்கான அறிவுறுத்தல்களை வெளியிடுவதற்கு உடனடியாக செயற்படவும்.

2. மாவட்ட தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவ } நிலையத்தில் இணைக்கப்பட்டுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் - இந்த சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பகா்க.

பிற்குறிப்பு :-

1. இதன் பிரதிகள் போட்டியிடுகின்ற அரசியற்கட்சிச் செயலாளர்கள் /சுயேச்சைக் குழுத் தலைவர்கள் /வேட்பாளர்கள் ஆகியோருக்கும், முகவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

2. மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் செயற்குழுவின் ஊடாக முகாமைத்துவ நிலையத்திற்குக் கிடைக்கும் முறைப்பாடுகளுள் கொள்கை ரீதியான முடிவுகள் எடுக்க வேண்டியிருப்பின் அது பற்றியும், ஏற்கெனவே ஆலோசனை பெற்றிராத சம்பவங்கள் தொடர்பாகவும் தேசிய தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் குழுவிற்கு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்து சட்டரீதியான ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

සභාපති
தவிசாளர்
දුරකථන/தொலைபேசி: 011-2868444
ෆැක්ස්/தொலைநகல் :011-2868445
*E-mail: comelesl@sltnet.lk*

මැතිවරණ කොමසාරිස් ජනරාල්
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
දුරකථන/தொலைபேசி:011-2885207
ෆැක්ස්/தொலைநகல் :011-2885208
*e-mail: cge@elections.gov.lk*

අතිරේක මැතිවරණ කොමසාරිස් (නීති)
மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம்)
දුරකථන/தொலைபேசி: 011-2867471
ෆැක්ස්/தொலைநகல்/Fax : 011-2868448
*e-mail: electionlegal@gmail.com*

EDR/25/CAT

# தேர்தல்கள் ஆணைக்குழு
# உள்ளுர் அதிகாரசபைகள் தேர்தல் 2025

| முறைப்பாட்டு இல | முறைப்பாட்டு வகை |
|---|---|
| **வன்முறைகள்** | |
| 1 | வாய்மொழி மூலம் பயமுறுத்துதல் |
| 2 | ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்துதல் |
| 3 | தாக்குதல்/கடுமையான தாக்குதல்கள் |
| 4 | கடுமையாக காயப்படுத்துதல் / கொலைமுயற்சி |
| 5 | மனிதக் கொலைகள் |
| 6 | ஆட்கடத்தல்கள் |
| 7 | கொள்ளையடித்தல் |
| 8 | துப்பாக்கிச் சூடு |
| 9 | தீவைத்தல் |
| 10 | கலவரத்தை ஏற்படுத்துதல்/ஆர்ப்பாட்டம் செய்தல்/ கூட்டங்களைக் கலைத்தல் |
| 11 | சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல்/சொத்துக்களை அபகரித்தல் |
| **சட்டமீறல்கள்** | |
| 12 | அசையும் மற்றும் அசைவற்ற பொதுச் சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்துதல் |
| 13 | அரச அலுவலர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் |
| 14 | அலுவலர்களின் நியமனம்/பதவிஉயர்வு/ இடமாற்றம்/சேவைக் காலத்தை நீடித்தல்/பரீட்சைகள் நடாத்துதல் |
| 15 | இலத்திரனியல் ஊடகத்தினை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் |
| 16 | பொய்ப்பிரச்சாரங்கள்/பொய்யான செய்திகளை உருவாக்குதல்/வன்மமான கூற்றுக்கள்/அவமதித்தல்/ இனவாதக் கூற்றுக்கள் |
| 17 | தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தல் |
| 18 | சட்டவிரோத சுவரொட்டிகள் /பதாதைகள்/கட்டவுட்கள் காட்சிப்படுத்துதல் /துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல் |
| 19 | பொருட்கள் விநியோகித்தல்/அன்பளிப்புகள் வழங்குதல்/பணம் வழங்குதல்/காணி உறுதிப்பத்திரங்கள் வழங்குதல்./திறப்பு விழாக்கள் நடாத்துதல் |
| 20 | கூட்டங்கள்/ஊர்வலங்கள் நடத்துதல்/சட்டவிரோத அரசியல் அலுவலகங்களை நடாத்துதல் |
| 21 | மதத் தலைவர்களூடாக பிரச்சாரங்களை மேற்கொள்ளல்/பிரச்சார நடவடிக்கைகளுக்காக மதவழிப்பாட்டுத் தலங்களில் மதவிழாக்களை நடாத்துததல் |
| 22 | அஞ்சல்மூல வாக்குத் தொடர்பான முறைப்பாடுகள் |
| 23 | வாக்கெடுப்பு நிலையம்/தேர்தல் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான முறைப்பாடுகள் |
| 24 | வாக்களிப்பதற்கு இடையூறு செய்தல் |
| 25 | சட்டவிரோத விழாக்களை ஒழுங்குபடுத்துதல் |
| 26 | வாக்காளர்களை உபசரித்தல் |
| 27 | தேர்தல் பிரச்சார அலுவலகங்கள் /சுவரொட்டிகள்,/பதாதைகள் போன்றவற்றிற்கு சேதம் விளைவித்தல் |
| 28 | சமூக ஊடகங்கள் ஊடாக நடாத்தப்படுகின்ற பிரச்சார நடவடிக்கைகள் |
| 29 | வாக்குப் பெட்டிகளுக்கு தீவைத்தல் மற்றும் அச்சுறுத்தல் விடுதல் |
| 30 | தேர்தல் பணிக்குழுவினர் மற்றும் முகவர்களை வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து விரட்டுதல் |
| 31 | வாக்காளர்களை விரட்டுதல் |
| 32 | வேறு (முறைப்பாட்டின் இயல்பு கட்டாயமாக குறிப்பிடப்படல் வேண்டும். |

**EDR/25/F1**

உமது இல - EC/EDR/LAE/2025/04
எனது இல -
திகதி -

தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையம்,
தேர்தல் ஆணைக்குழு

உள்ளுர் அதிகாரசபைகள் தேர்தல் -2025/.../...
<u>தேர்தல் முறைப்பாடு பிணக்குகளைத் தீர்த்தல் நிலையங்களை செயற்படுத்துதல்.</u>

உள்ளுர் அதிகாரசபைகள் தேர்தல் 2025 தொடர்பாக …………………….. மாவட்டத்தின் தேர்தல் முறைப்பாடு பிணக்குகள் தீர்த்தல் நிலையங்களுககு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் கீழ் குறிப்பிடபட்டவாறாகும்.

1. மாவட்ட முறைப்பாடு பிணக்குகள் தீர்த்தல் நிலையம். -
...............................................................
    - அமைக்கப்பட்டுள்ள அமைவிடம் - ........................................................
    - முகவரி - ..........................................................
    - தொலைபேசி இலக்கம் - ..........................................................
    - தொலைநகல் - ..........................................................

2. உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்
    - பெயர் - ..........................................................
    - பதவி - ..........................................................
    - கையடக்க தொலைபேசி இல (Whatsapp)- ..................................

    - பெயர் - ..........................................................
    - பதவி - ..........................................................
    - கையடக்க தொலைபேசி இல Whatsapp) - ............................................

    - பெயர் - ..........................................................
    - பதவி - ..........................................................
    - கையடக்க தொலைபேசி இல Whatsapp) - ............................................

3. பிரதான பொலிஸ் ஒருங்கிணைப்பு அலுவலர்
    - பெயர் - ........................................................
    - தொலைபேசி இலக்கம் - ........................................................
    - கையடக்க தொலைபேசி இல - ..........................................................

--------------------------
தெரிவத்தாட்சி அலுவலர்
பிரதி தேர்தல்கள் ஆணையாளர்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்
............................................மாவட்டம்

EDR/25/F2

# தேர்தல்கள் ஆணைக்குழு

## உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் -2025/..../.....

### தேர்தல் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்ளும் படிவம் (பொதுமக்கள்)

| | |
|---|---|
| முறைப்பாட்டு இலக்கம் | |
| முறைப்பாடு கிடைக்கப் பெற்ற விதம் :<br>Te☐ Fa☐ B☐ L☐ E-ma☐ ☐ V☐ ☐ M☐ W☐ | |
| திகதி | நேரம் |
| முறைப்பாட்டாளரின் பெயர்/கட்சி/சுயேச்சைக்குழு திரு./திருமதி/செல்வி........................................<br>...................................................................................................................................................... | |
| தொலைபேசி இலக்கம் : | |
| நிகழ்வு இடம்பெற்ற இடமும் நேரமும் | |
| மாவட்டம் | பொலிஸ் அதிகார பிரதேசம் |
| பிரதேச செயலகம் | கிராமம் / வீதி |
| முறைப்பாடு அல்லது குற்றச்சாட்டு தொடர்பான விபரம் | |

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் **- 2025/...../.......**

தேர்தல் முறைப்பாட்டுகளின் 24 மணித்தியாலச் சாரம்சத்தின் அறிக்கை........................... மாவட்டம் 2025/..../....திகதி பி.ப

| தொடர் இலக்கம் | முறைப்பாடு கிடைத்த விதம் | | | | முறைப்பாடு கிடைத்த நேரம் | முறைப்பாட்டாளர் | அரசியற் கட்சி/சுயேச்சைக் குழு | நிகழ்வு இடம்பெற்ற அமைவிடம்/குறித்தபொலிஸ் அதிகாரபிரதேசம் | முறைப்பாட்டின் சாரம்சம் | முறைப்பாட்டின் வகை | | | முறைப்பாட்டு இயல்பு | | | எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் முன்னேற்றம் | முறைப்பாட்டு முகாமையாளர் அலுவலரின் பெயர். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Letter | Telep | Fax | e-mail | | | | | | வன்செயல்கள் | சட்டமீறல்கள் | வேறு | சிறு | சாதாரண | கடுமையான | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

| இலக்கம் | முறைப்பாட்டு வகை | இலக்கம் | முறைப்பாட்டு வகை |
|---|---|---|---|
| | வன்முறைகள் | | சட்டமீறல்கள் |
| | | 12 | அசையும் மற்றும் அசைவற்ற பொதுச் சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்துதல் |
| 1 | வாய்மொழி மூலம் பயமுறுத்துதல் | 13 | அரச அலுவலர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் |
| 2 | ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்துதல் | 14 | அலுவலர்களின் நியமனம்/பதவிஉயர்வு/ இடமாற்றம்/சேவைக் காலத்தைநீடித்தல்/பரீட்சைகள் நடாத்துதல் |
| 3 | தாக்குதல்/கடுமையான தாக்குதல்கள் | 15 | இலத்திரனியல் ஊடகத்தினை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் |
| 4 | கடுமையாக காயப்படுத்துதல் /கொலைமுயற்சி | 16 | பொய் பிரச்சாரங்கள்/பொய்யான செய்திகளை உருவாக்குதல்/வன்மக் கூற்றுக்கள்/அவமதித்தல்/ இனவாதக் கூற்றுக்கள் |
| 5 | மனிதக் கொலைகள் | 17 | தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தல் |
| 6 | ஆட்கடத்தல்கள் | 18 | சட்டவிரோத சுவரொட்டிகள் /பதாதைகள்/கட்டவுட்கள் காட்சிப்படுத்துதல் /துண்டுப் பிரச்சுரங்கள் விநியோகித்தல் |
| 7 | கொள்ளையடித்தல் | 19 | பொருட்கள் விநியோகித்தல்/அன்பளிப்புகள் வழங்குதல்/பணம் வழங்குதல்/காணிஉறுதிப்பத்திரங்கள் வழங்குதல்./திறப்புவிழாக்கள் நடாத்துதல் |
| 8 | துப்பாக்கிச் சூடு | 20 | கூட்டங்கள்/ஊர்வலங்கள் நடத்துதல்/சட்டவிரோத அரசியல் அலுவலகங்களை நடாத்துதல் |
| 9 | தீவைத்தல் | 21 | மதத் தலைவர்களூடாக பிரச்சாரங்களை மேற்கொள்ளல்/பிரச்சார நடவடிக்கைகளுக்காக மதவழிப்பாட்டுத் தலங்களில் மதவிழாக்களை நடாத்துதல் |
| 10 | கலவரத்தை ஏற்படுத்துதல்/ஆர்ப்பாட்டம் செய்தல்/கூட்டங்களை கலைத்தல் | 22 | அஞ்சல்மூல வாக்குத் தொடர்பான முறைப்பாடுகள் |
| | | 23 | வாக்கெடுப்பு நிலையம்/தேர்தல் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான முறைப்பாடுகள் |
| 11 | சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல்/சொத்துக்களை அபகரித்தல் | 24 | வாக்களிப்பதற்கு இடையூறு செய்தல் |
| | | 25 | சட்டவிரோத விழாக்களை ஒழுங்குபடுத்துதல் |
| | | 26 | வாக்காளர்களை உபசரித்தல் |
| | | 27 | தேர்தல் பிரச்சார அலுவலகங்கள்/சுவரொட்டிகள்,/பதாதைகள் போன்றவற்றிற்கு சேதம் விளைவித்தல் |
| | | 28 | சமூக ஊடகங்கள் ஊடாக நடாத்தப்படுகின்ற பிரச்சார நடவடிக்கைகள் |
| | | 29 | வாக்குப் பெட்டிகளுக்கு தீவைத்தல் மற்றும் அச்சுறுத்தல் விடுதல் |
| | | 30 | தேர்தல் பணிக்குழுவினர் மற்றும் முகவர்களை வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து விரட்டுதல் |
| | | 31 | வாக்காளர்களை விரட்டுதல் |
| | | 32 | வேறு (முறைப்பாட்டின் இயல்பு கட்டாயமாக குறிப்பிடப்படல் வேண்டும். |

*முறைப்பாட்டின் வகையும் அதற்குரிய இலக்கமும் குறிப்பிடப்படல் வேண்டும்.

................................................ திகதி

.................................... ஒப்பம்

EDR/25/F3-B

# தேர்தல்கள் ஆணைக்குழு
## உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் 2025/..../....

| முறைப்பாட்டு இல | முறைப்பாட்டு வகை | நடப்பு திகதி | நடப்பு திகதி வரை | முழு மொத்தம் |
|---|---|---|---|---|
| வன்முறைகள் | | | | |
| 1 | வாய்மொழி மூலம் பயமுறுத்துதல் | | | |
| 2 | ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்துதல் | | | |
| 3 | தாக்குதல்/கடுமையான தாக்குதல்கள் | | | |
| 4 | கடுமையாக காயப்படுத்துதல் / கொலைமுயற்சி | | | |
| 5 | மனிதக் கொலைகள் | | | |
| 6 | ஆட்கடத்தல்கள் | | | |
| 7 | கொள்ளையடித்தல் | | | |
| 8 | துப்பாக்கிச் சூடு | | | |
| 9 | தீவைத்தல் | | | |
| 10 | கலவரத்தை ஏற்படுத்துதல்/ஆர்ப்பாட்டம் செய்தல்/ கூட்டங்களைக் கலைத்தல் | | | |
| 11 | சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல்/சொத்துக்களை அபகரித்தல் | | | |
| மொத்தம் | | | | |
| சட்டமீறல்கள் | | | | |
| 12 | அசையும் மற்றும் அசைவற்ற பொதுச் சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்துதல் | | | |
| 13 | அரச அலுவலர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் | | | |
| 14 | அலுவலர்களின் நியமனம்/பதவிஉயர்வு/ இடமாற்றம்/சேவைக் காலத்தை நீடித்தல்/பரீட்சைகள் நடாத்துதல் | | | |
| 15 | இலத்திரனியல் ஊடகத்தினை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் | | | |
| 16 | பொய்ப்பிரச்சாரங்கள்/பொய்யான செய்திகளை உருவாக்குதல்/வன்மமான கூற்றுக்கள்/அவமதித்தல்/ இனவாதக் கூற்றுக்கள் | | | |
| 17 | தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தல் | | | |
| 18 | சட்டவிரோத சுவரொட்டிகள் /பதாதைகள்/கட்டவுட்கள் காட்சிப்படுத்துதல் /துண்டுப் பிரச்சுரங்கள் விநியோகித்தல் | | | |
| 19 | பொருட்கள் விநியோகித்தல்/அன்பளிப்புகள் வழங்குதல்/பணம் வழங்குதல்/காணி உறுதிப்பத்திரங்கள் வழங்குதல்./திறப்பு விழாக்கள் நடாத்துதல் | | | |
| 20 | கூட்டங்கள்/ஊர்வலங்கள் நடத்துதல்/சட்டவிரோத அரசியல் அலுவலகங்களை நடாத்துதல் | | | |
| 21 | மதத் தலைவர்களூடாக பிரச்சாரங்களை மேற்கொள்ளல்/பிரச்சார நடவடிக்கைகளுக்காக மதவழிப்பாட்டுத் தலங்களில் மதவிழாக்களை நடாத்துததல் | | | |
| 22 | அஞ்சல்மூல வாக்குத் தொடர்பான முறைப்பாடுகள் | | | |
| 23 | வாக்கெடுப்பு நிலையம்/தேர்தல் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான முறைப்பாடுகள் | | | |
| 24 | வாக்களிப்பதற்கு இடையூறு செய்தல் | | | |
| 25 | சட்டவிரோத விழாக்களை ஒழுங்குபடுத்துதல் | | | |
| 26 | வாக்காளர்களை உபசரித்தல் | | | |
| 27 | தேர்தல் பிரச்சார அலுவலகங்கள் /சுவரொட்டிகள்,/பதாதைகள் போன்றவற்றிற்கு சேதம் விளைவித்தல் | | | |
| 28 | சமூக ஊடகங்கள் ஊடாக நடாத்தப்படுகின்ற பிரச்சார நடவடிக்கைகள் | | | |
| 29 | வாக்குப் பெட்டிகளுக்கு தீவைத்தல் மற்றும் அச்சுறுத்தல் விடுதல் | | | |
| 30 | தேர்தல் பணிக்குழுவினர் மற்றும் முகவர்களை வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து விரட்டுதல் | | | |
| 31 | வாக்காளர்களை விரட்டுதல் | | | |
| 32 | வேறு (முறைப்பாட்டின் இயல்பு கட்டாயமாக குறிப்பிடப்படல் வேண்டும். | | | |
| மொத்தம் | | | | |

EDR/25/F4

# தேர்தல்கள் ஆணைக்குழு

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் -2025/......../......

தேர்தல் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் படிவம் (சட்டத்தை மீறுதல்)

| | |
|---|---|
| முறைப்பாட்டு இலக்கம் | |
| முறைப்பாடு கிடைக்கப்பெற்ற விதம்<br>Tel ☐ Fax ☐ BH ☐ Ltr ☐ E-mail ☐ V ☐ W ☐ F ☐ M ☐ Web ☐ | |
| திகதி | நேரம் |
| முறைப்பாட்டாளரின் பெயர்/கட்சி/சுயேச்சைக் குழு திரு./திருமதி/செல்வி................................<br>........................................................................................................................................ | |
| தொலைபேசி இலக்கம் : | |
| நிகழ்வு இடம்பெற்ற இடமும் நேரமும் | |
| மாவட்டம் | பொலிஸ் அதிகார பிரதேசம் |
| பிரதேச செயலகம் | கிராமம் / வீதி |
| முறைப்பாடு அல்லது குற்றச்சாட்டு தொடர்பான விபரம் | |

| | | | |
|---|---|---|---|
| முறைப்பாடுகளின் வகை:- | | | முறைப்பாட்டு இல ☐ |
| *முறைப்பாட்டின் இயல்பு | சிறு 1 2 3 | சாதாரணமான 4 5 6 7 | கடுமையான 8 9 10 |
| *முறைப்பாடு கிடைத்த சந்தர்ப்பத்தில் அந்த முறைப்பாடு தேர்தல் தொடர்பாக எவ்வாறு பாதிக்கின்றது என்பதைப் பற்றிய உங்களது கணிப்பு | | | |
| அறிவுரை | முறைப்பாடு கொடுக்கப்பட்டுள்ளது | | வழங்கிய திகதியும் நேரமும் |
| | பொலிஸ் | மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு நிலையம் | |

பொலிஸ் தேர்தல் பிரிவு–பிரதிப் பொலிஸ் மாஅதிபர்/பிரதி/உதவித் தேர்தல் ஆணையாளர்/மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு நிலையம்.

ஒப்பம் :-

| | | |
|---|---|---|
| பதில் கிடைக்கப் பெற்றுள்ளது | பொலிஸ் ஆம் ☐ இல்லை ☐ | மா.தே.அலு ஆம் ☐ இல்லை ☐ |

**EDR/25/F5**

தேர்தல்கள் ஆணைக்குழு
உள்ளுர் அதிகாரசபைகள் தேர்தல் -2025
(தேர்தல் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் படிவம் (வன்செயல்கள்)

| | |
|---|---|
| முறைப்பாட்டு இலக்கம் | |
| முறைப்பாடு கிடைக்கப் பெற்ற விதம் | Tel ☐ Fa ☐ B ☐ Lt ☐ E-ma ☐ V ☐ W ☐ F ☐ M ☐ Web ☐ |
| திகதி | நேரம் |
| முறைப்பாட்டாளரின் பெயர்/கட்சி/சுயேச்சைக்குழு/திரு./திருமதி/செல்வி……………………………………<br>……………………………………………………………………………………………………………………… | |
| தொலைபேசி இலக்கம் : | |
| நிகழ்வு இடம்பெற்ற இடமும் நேரமும் | |
| மாவட்டம் | பொலிஸ் அதிகார பிரதேசம் |
| பிரதேச செயலகம் | கிராமம்/வீதி |
| முறைப்பாடு அல்லது குற்றச்சாட்டு தொடர்பான விபரம் | |
| முறைப்பாட்டுகளின் வகை:- | முறைப்பாட்டு இலக்கம் ☐ |

| *முறைப்பாட்டின் இயல்பு | சிறு 1 2 3 | சாதாரணம் 4 5 6 7 | பாரதூரமான 8 9 10 |
|---|---|---|---|
| *முறைப்பாடு கிடைத்த சந்தர்ப்பத்தில் அந்த முறைப்பாட்டு தேர்தல் தொடர்பாக எவ்வாறு பாதிக்கின்றது என்பதை பற்றிய உங்களது அவதானிப்பு | | | |
| அறிவுரை | முறைப்பாடு முன்னளிக்கப்பட்டுள்ளது | | வழங்கிய திகதியும் நேரமும் |
| | பொலிஸ் | மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு நிலையம் | |

| | | |
|---|---|---|
| பொலிஸ் தேர்தல் பிரிவு – பிரதிபொலிஸ் மாஅதிபர்/பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையர்/மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு நிலையம். | | |
| ஒப்பம் :- | | |
| பதில் கிடைக்கப் பெற்றுள்ளது | பொலிஸ் ஆம் ☐ இல்லை ☐ | மா.தே.அலு ஆம் ☐ இல்லை ☐ |

மறுபக்கமும் நிரப்பப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| 1 | முறைப்பாட்டின் இயல்பு தொடர்பாக முறைப்பாட்டு பிணக்குகள் தீர்த்தல் நிலையத்தின் விபரம் : |
| 2 | பொலிஸ் அறிக்கை (பொலிஸ் அறிக்கை இலக்கம்/அறிக்கை/வழக்குகோவை இலக்கம்/வழக்கு தொடரப்பட்ட அறிக்கை): |
| 3 | இதனூடாக தேர்தல் நடவடிக்கைக்காக தொடரப்பட்ட அறிக்கை சம்பந்தமாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் அவதானிப்பு |
| 4 | தேசியத் தேர்தல் முறைப்பாடு பிணக்குகள் செயற்படுத்துதல் நிலையங்களின் தலைமை அலுவலரின பரிந்துரை |
| 5 | தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்புரை : |